## நவம்பர் – 12 – பொதுக்கால 32ம் ஞாயிறு

**“விழிப்பாயிருங்கள் ஏனெனில் அவர் வரும் நாளோ வேளையோ உங்களுக்குத் தெரியாது” (மத்25:13)**

### முதல் வாசகம் : சாலமோனின் ஞானம் 6 : 12 – 16

ஞானம் ஒளிமிக்கது. மங்காதது. அதன்பால் அன்புகூர்வோர் அதை எளிதில் கண்டுகொள்வர் அதைத் தேடுவோர் கண்டடைவர். தன்னை நாடுவோர்க்கு அது தன்னையே விரைந்து வெளிப்படுத்தும். வைகறையில் அதைத் தேடுவோர் தளர்ச்சி அடைய மாட்டார்கள் ஏனெனில் தம் கதவு அருகில் அது அமர்ந்திருப்பதை அவர்கள் காண்பார்கள். அதன்மீது மனத்தைச் செலுத்துவதே ஞானத்தின் நிறைவு. அதன்பொருட்டு விழிப்பாய் இருப்போர், கவலையிலிருந்து விரைவில் விடுபடுவர். தனக்குத் தகுதியுள்ளவர்களை ஞானம் தேடிச்செல்கிறது. அவர்களுடைய வழியில் கனிவுடன் தன்னையே காட்டுகிறது் அவர்களின் ஒவ்வொரு நினைவிலும் அது அவர்களை எதிர்கொள்கிறது

**பதில்பாடல்:** என் இறைவா என் உயிர் உம்மீது தாகம் கொண்டுள்ளது

### இரண்டாம் வாசகம் : 1 தெசலோனி 4 : 13 - 18

சகோதர சகோதரிகளே! இறந்தோரைப் பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம் எதிர்நோக்கு இல்லாத மற்றவர்களைப் போல் நீங்களும் துயருறக் கூடாது. இயேசு இறந்து உயிர்த்தெழுந்தார் என நாம் நம்புகிறோம். அப்படியானால், இயேசுவோடு இணைந்த நிலையில் இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்து வருவார். ஆண்டவருடைய வார்த்தையின் அடிப்படையில் நாங்கள் உங்களுக்குக் கூறுவது இதுவே ஆண்டவர் வரும்வரை உயிரோடு எஞ்சியிருக்கும் நாம், இறந்தோரை முந்திவிட மாட்டோம். கட்டளை பிறக்க, தலைமை வானதூதரின் குரல் ஒலிக்க, கடவுளுடைய எக்காளம் முழங்க, ஆண்டவர் வானினின்று இறங்கி வருவார் அப்பொழுது, கிறிஸ்து மீது நம்பிக்கை கொண்ட நிலையில் இறந்தவர்கள் முதலில் உயிர்த்தெழுவர். பின்னர் உயிரோடு எஞ்சியிருக்கும் நாம், அவர்களோடு மேகங்களில் எடுத்துக் கொண்டுபோகப்பட்டு, வான்வெளியில் ஆண்டவரை எதிர்கொள்ளச் செல்வோம். இவ்வாறு எப்போதும் நாம் ஆண்டவரோடு இருப்போம். எனவே, இவ்வார்த்தை களைச் சொல்லி ஒருவரை ஒருவர் தேற்றிக் கொள்ளுங்கள்.

### நற்செய்தி : மத்தேயு 25 : 1 - 13

இயேசு தம் சீடர்களைப் பார்த்துக் கூறியதாவது? ”அந்நாளில் விண்ணரசு எவ்வாறு இருக்கும் என்பதைப் பின்வரும் நிகழ்ச்சி வாயிலாக விளக்கலாம் மணமகனை எதிர்கொள்ள மணமகளின் தோழியர் பத்துப்பேர் தங்கள் விளக்குகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள். வர்களுள் ஐந்து பேர் அறிவிலிகள் ஐந்து பேர் முன்மதி உடையவர்கள். அறிவிலிகள் ஐவரும் தங்கள் விளக்குகளை எடுத்துச் சென்றார்கள் ஆனால் தங்களோடு எண்ணெய் எடுத்துச் செல்லவில்லை. முன்மதியுடையோர் தங்கள் விளக்குகளுடன் கலங்களில் எண்ணெயும் எடுத்துச் சென்றனர். மணமகன் வரக் காலந் தாழ்த்தவே அனைவரும் தூக்க மயக்கத்தால் உறங்கிவிட்டனர். நள்ளிரவில், ”இதோ மணமகன் வருகிறார். அவரை எதிர்கொள்ள வாருங்கள்” என்ற உரத்த குரல் ஒலித்தது. மணமகளின் தோழியர் எல்லாரும் எழுந்து தங்கள் விளக்குகளை ஒழுங்குபடுத்தினர். அப்போது அறிவிலிகள் முன்மதியுடையோரைப் பார்த்து, ”எங்கள் விளக்குகள் அணைந்து கொண்டிருக்கின்றன் உங்கள் எண்ணெயில் எங்களுக்கும் கொடுங்கள்” என்றார்கள். முன்மதி உடையவர்கள் மறுமொழியாக, ”உங்களுக்கும் எங்களுக்கும் எண்ணெய் போதுமான அளவு இராமல் போகலாம். எனவே வணிகரிடம் போய் நீங்களே வாங்கிக் கொள்வதுதான் நல்லது” என்றார்கள். அவர்களும் வாங்கப் புறப்பட்டுச் சென்றார்கள். அப்போது மணமகன் வந்து விட்டார். ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடு திருமண மண்டபத்துக்குள் புகுந்தார்கள். கதவும் அடைக்கப்பட்டது. பிறகு மற்றத் தோழிகளும் வந்து, ”ஐயா, ஐயா, எங்களுக்குக் கதவைத் திறந்துவிடும்” என்றார்கள். ”அவர் மறுமொழியாக, ”உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன் எனக்கு உங்களைத் தெரியாது” என்றார். எனவே விழிப்பாயிருங்கள் ஏனெனில் அவர் வரும் நாளோ வேளையோ உங்களுக்குத் தெரியாது“ என்றார்.

**தியானம்:** நம்மில் பலருக்கு ஆண்டவரின் இரண்டாம் வருகை குறித்த சந்தேகங்கள் பல உண்டு. ஆண்டவருடைய இரண்டாம் வருகை எப்போது இருக்கும்? இயேசு உண்மையிலேயே மீண்டும் வருவாரா? அவர் எப்படி வருவார்? அண்மைக்காலங்களில் ஆண்டவரின் வருகைக்கான அருங்குறிகள் நிறைவேறி வருகின்றது என்று பலரும் சொல்கின்றார்களே இது உண்மையா? பொய்யா? என்று மனதிற்குள் குழம்பி கலங்கி நிற்கின்றோம். ஆண்டவரின் இரண்டாம் வருகைக்குறித்து நமக்கு எந்த சந்தேகமும் வேண்டாம். லூக்.21:27ல் நாம் வாசிக்கின்றோம் “அப்போது மிகுந்த வல்லமையோடும் மாட்சியோடும் மானிடமகன் மேகங்கள் மீது வருவதை அவர்கள் காண்பார்கள்” மத்.24:27 “மின்னல் கிழக்கில் தோன்றி மேற்கு வரை ஒளிர்வது போல மானிடமகனின் வருகையும் இருக்கும்”. ஆண்டவரின் வருகை கண்டிப்பாக இருக்கும். இதுவே நமது கத்தோலிக்க நம்பிக்கை. இன்றைய நற்செய்தி வாசகத்தில் நாம் பார்க்கும் முன்மதியுடையவர்களாக செயல்படுகின்றோமா என்பதுதான் இன்று நம்முன் வைக்கப்படும் கேள்வி. முன்மதியுடையவர்களை இன்றைய முதல்வாசகம் ஞானம் நிறைந்தவர்களாக உருவகப்படுத்துகின்றது. ஞானம் என்பது ஆண்டவரிடத்தில் நாம் கொள்ளும் அச்சம் என்று சீராக்.1:14 மற்றும் நீதிமொழி.1:7ல் வாசிக்கின்றோம். ஆண்டவரிடத்தில் கொள்ளும் அச்சம் என்பது மூன்று படிநிலைகளை உள்ளடக்கியது. முதலாவது கடவுள் யார்? அவர் உயிருள்ள தேவன், வாக்கு மாறாதாவர், என்னுடைய மீட்பர் என்று அறிந்து கொள்ளுதல், இரண்டாது கடவுளில் நான் யார்? நான் விண்ணகக் கடவுளின் மண்ணகப் பிரதிநிதி, இருளின் மத்தியில் வெளிச்சமாக பிரகாசிக்க தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட பாத்திரம் என்பதை உணர்ந்து கொள்ளுதல், மூன்றாவது கடவுள் என் வழியாக இந்த உலகத்தில் என்ன செய்ய விரும்புகின்றார், அவருடைய சித்தம் என்ன என்று புரிந்துகொள்வது. இந்த மூன்று நிலைகளைக் கண்டுணர நமக்கு கடவுளால் கொடுக்கப்பட்ட தூய ஆவியின் நெருப்பு அணையாமல் இருக்க செபம் என்ற எண்ணெய் ஊற்றப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். பலி பீடத்தில் எரியும் நெருப்பு அணையாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்று லேவி.6:13 ல் வாசிப்பதைப்போல இதயம் என்னும் பலிபீடத்தில் தேவன் நமக்குக் கொடுத்த ஆவியின் அக்கினி எரிந்து கொண்டேயிருக்க நாம் விழித்திருந்து செபிக்க வேண்டும். அக்கினி இருக்கும் வரைதான் நம்முடைய ஆன்மாவுக்கு பாதுகாப்பு. அக்கினி தொடர்ந்து எரிய நம்முடைய செப வாழ்வு என்ற எண்ணெய் ஊற்றப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.